## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

**அ.வ.எண்.65/2018**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு செப்டம்பர் மாதம் 17 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மணி | மதம் | : இந்து |
| த/பெ | : கணேச ரெட்டி | ஜாதி | : -- |
| வயது | : 65 | கிராமம் | : திருத்தணி |
| தொழில் | : கூலி | வட்டம் | : திருத்தணி |

**17.09.2025**

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

4. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 1 நேசம்மாள் எழுதி கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ 1 ஆவணத்தில் சொல்லியுள்ள அளவு நான்கு எல்லைகள் வழக்கில் சொல்லப்படவில்லை என்றால் வழக்கில் சொல்லப்பட்டுள்ளது. அசல் வழக்கில் சொல்லப்பட்டுள்ள அளவு, நான்கு எல்லைகளும் வா.சா.ஆ 1ல் உள்ள அளவு நான்கு எல்லைகளும் வெவ்வேறு என்றால் சரியல்ல. ஒரே அளவுதான். வா.சா.ஆ 1 என்னால் பொய்யாக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் இல்லை. வழக்கில் சொல்லியுள்ள A அட்டவணை சொத்து தனம்மாளுக்கு பாத்தியம் என்பதை காட்ட நான் எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

5. நான் 47 வருடங்களாக அனுபவித்து வருவதாக இந்த வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். வா.சா.ஆ 1 ஆனது 2006ம் வருடத்திற்கான ஆவணம் என்றால் சரிதான். 2006ல் தான் என் பெயரில் கிரைய ஆவணம் தயார் செய்துவிட்டு 47 வருடங்களாக குடியிருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் வட்டாட்சியரை தரப்பினராக சேர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். வட்டாட்சியர் பதில் தாக்கல் செய்துள்ளது தெரியுமா என்றால் தெரியாது. எனது வழக்கறிஞரிடம் வட்டாட்சியர் பதில் தாக்கல் செய்துள்ளாரா என்பதை கேட்டேனா என்றால் நான் கேட்கவில்லை. அரசு தரப்பில் சொல்லியுள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்றாலும் மேற்படி விவரங்கள் எனக்கு எதிராக சொல்லப்பட்டுள்ளதால் எனக்கு தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றாலும்

சரியல்ல.

6. தனம்மாள் சாலையில் ஆக்கிரமிப்பு செய்த பி அட்டவணை சொத்து அரசால் அகற்றப்பட்டுவிட்டதாக அரசு தரப்பு எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பொய். பி அட்டவணை சொத்தில் எப்போதுமே நான் அனுபவத்தில் இருந்ததில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 2, வா.சா.ஆ 3 வரி ரசீதுகள் வழக்கு சொத்திற்கு சம்மந்தப்பட்டவை அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 4 லேயே அரசு புறம்போக்கு நிலம் என்றுதான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ 5 புகார் மனு என் மனைவி கொடுத்தது என்றால் சரிதான். வா.சா.ஆ 5 புகார் மனுவில் லலிதா, கௌரி, லட்சுமி ஆகியோர் மூவரும் சேர்ந்துதான் வேலி அமைத்ததாக சொல்லியுள்ளார் என்றால் ஆமாம். லலிதா, கௌரி, லட்சுமி ஆகியோரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சுப்பிரமணி, வாசு ஆகிய இருவர்தான் ஒரே நீட்டாக கொட்டகை அமைத்தார்கள். எனவே அவர்கள் மீது வழக்கு தாக்கல் செய்தேன். பிரதிவாதிகள் அவர்கள் இடத்தில்தான் கொட்டகை அமைத்துள்ளார்கள் என்றாலும் நான் எந்த உரிமையும் இல்லாமல் பிரதிவாதிகள் மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் இந்த வழக்கில் கேட்டுள்ள பரிகாரம் எனக்க கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

7. நான் பிறந்து வளர்ந்தது எல்லாம் திருத்தணிதான் என்றால் சரிதான். எனக்கு எந்த அனுபவமும் உரிமையும் இல்லாமல் பிரதிவாதிகள் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2006ல் வாங்கி 18 வருடங்களாக அனுபவித்து வருவதை காட்ட என்னிடம் ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. வழக்கு சொத்து அரசுக்கு பாத்தியப்பட்ட அரசின் அனுபவத்தில் உள்ள அரசு புறம்போக்கு நிலம் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் சொல்லியுள்ள உரிமைமூலம் வியாஜியமூலம் பரிகாரம் அனைத்தும் தவறானது என்றால் சரியல்ல. நான் வழக்கில் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது என்றால் சரியல்ல. எனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை 5, 6 பிரதிவாதிகள் தரப்பில் ஒத்திவைக்கப்படுகிறது)